பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 03 2024 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

- நடைபாதை வியாபாரிகளுக்கான ஸ்வநிதி திட்டம், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்படுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் என்று மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.
- விண்வெளித்துறையில் இந்தியா புதிய உச்சம் பெறுவதை ககன்யான் திட்டம் உறுதி செய்யும் என்று மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
- பூட்டான் பிரதமர் திரு Dasho Tshering Tobgay ஐந்து நாள் பயணமாக இன்று புதுதில்லி வந்தடைந்தார்.
- ஸ்பெயினில் நடைபெற்ற பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இன்று, இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

--- *இனி விரிவான செய்திகள்* --

<<<<<<<>>>>>

நடைபாதை வியாபாரிகளுக்கான ஸ்வநிதி திட்டம், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, ஒரு லட்சம் நடைபாதை வியாபாரிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்களை வழங்கி அவர் பேசினார்.

கோவிட் காலத்தில் நடைபாதை வியாபாரிகளின் நிலையை கருத்தில்கொண்டு அவர்களுக்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது என்று அவர் கூறினார்.

அப்போது, நடைபாதை வியாபாரிகளின்சேவை இல்லாமல், நம்முடைய வாழ்வை நினைத்துப்பார்க்க முடியாத நிலை உருவானதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சமுதாயத்திற்கு நடைபாதை வியாபாரிகள் அளித்துவரும் பங்களிப்புக்கு பாராட்டுகளையும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

வறுமையிலிருந்து தாம் மீண்டு வந்ததை நினைவுகூர்ந்த பிரதமர், அதனால்தான் கவனிப்பாரின்றி இருந்த நடைபாதை வியாபாரிகளின் நிலைமையை தம்மால் புரிந்துகொள்ள முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேறு எவரும் வழங்க முடியாத உத்தரவாதத்தை வங்கிகளுக்கும், நடைபாதை வியாபாரிகளுக்கும் தாம் வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் நடைபாதை வியாபாரிகள் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு இந்த திட்டம் பேருதவியாக உள்ளது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<>>>>>

குடியுரிமை திருத்தச் சட்டம் யாருடைய குடியுரிமையையும் பறிப்பதற்கானதல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த சட்டம் குடியுரிமை வழங்குவதற்கானது என்று தெளிவுபடுத்தினார்.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானிலிருந்து வந்த இந்து, புத்த, ஜெயின், சீக்கிய, கிறிஸ்தவ மற்றும் பார்சி சமுதாயத்தைச் சேர்ந்த அகதிகளுக்கு குடியுரிமை வழங்க இந்த சட்டம் வகைசெய்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்த சட்டம் குறித்து சிறுபான்மையினர் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனை அரசியலாக்கக் கூடாது என்றும் திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டார்.

<<<<<<<>>>>>

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருப்பதாக மத்திய அமைச்சரும், அக்கட்சியின் மூத்த தலைவருமான திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் 'Barpeta –வில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இந்தியா புதிய உச்சத்தை அடைந்து, வெற்றிப்பாதையில் செல்வதாக கூறினார்.

வரும் 2027-ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

வடகிழக்கு மாநிலங்களில் கடந்த பத்தாண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தி ஐ ஐ டி-யில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர், வடகிழக்கு மாநிலங்கள் நீண்டகாலத்திற்கு பின் எழுச்சி பெற்றுள்ளதாக கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்காக பிரதமர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாகவும், மத்திய அமைச்சர்கள் இந்த பிராந்தியத்திற்கு 850 முறை வருகை தந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் வளர்ச்சிக்கான முன்னோட்டமாக வடகிழக்கு மாநிலங்கள் திகழ்வதாகவும், இந்த மாநிலங்கள் பலனடையும் வகையில் மத்திய அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்படுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலத்தில், ஆயிரத்து 385 கோடி ரூபாய் மதிப்பிலான 295 சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அவர் அனுமதி வழங்கியுள்ளார்.

மேலும், தெலங்கானாவில் 435 கிலோமீட்டர் தொலைவிலான மாநில நெடுஞ்சாலைகளை 850 கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்தும் பணிகளுக்கும், ராஜஸ்தான் மாநிலத்தில் சுமார் தொள்ளாயிரத்து 72 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை விரிவாக்கப் பணிகளுக்கும் திரு நிதின்கட்கரி ஒப்புதல் அளித்துள்ளார்.

புதுதில்லியில் இதுகுறித்து பேசிய அவர், இதுபோன்ற நெடுஞ்சாலை இணைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டங்களின் மூலம் சமூக பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று கூறினார்.

மேலும், உள்ளூர் சுற்றுலாவை பிரபலப்படுத்துவதுடன் மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் இவை உதவும் என்று திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

விண்வெளித்துறையில் இந்தியா புதிய உச்சம் பெறுவதை ககன்யான் திட்டம் உறுதி செய்யும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சுயசார்பு இந்தியா தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிவியல் முன்னேற்றங்களில் கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் பங்கு பாராட்டத்தக்க அளவில் மேம்பட்டிருப்பதாக கூறினார்.

சந்திரயான்-3, ஆதித்யா எல்-1 விண்கலங்களின் சாதனையால் உலக அளவில் இந்தியாவின் புகழ் வெளிப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ககன்யான் திட்டம் விண்வெளித்துறையில் மேலும் முன்னேற்றமான நிலையை உருவாக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பொது சுகாதாரத்துறையில் குறிப்பாக தடுப்பூசி உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு நாடுகளுக்கும் தடுப்பூசி வழங்குவதன் மூலம் சுகாதார பாதுகாப்பில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

பூட்டான் பிரதமர் திரு Dasho Tshering Tobgay ஐந்து நாள் பயணமாக இன்று புதுதில்லி வந்தடைந்தார்.

கடந்த ஜனவரி மாதம் பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் அவர் முதல் முறையாக இந்தியா வந்துள்ளார்.

தில்லி விமான நிலையத்தில் மத்திய அமைச்சர் திரு அஷ்வினி குமார் சௌபே, பூட்டான் பிரதமரை வரவேற்றார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து பேசும் பூட்டான் பிரதமர், தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்த இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், மும்பைக்கும் பூட்டான் பிரதமர் பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவும் இந்தியா வந்துள்ளது.

<<<<<<<>>>>>

தில்லி – ஹரியானாவை இணைக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி அண்மையில் திறந்துவைத்த துவாரகா விரைவுச்சாலையில் இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் தடை விதித்துள்ளது.

இந்த விரைவுச்சாலையில் அதிவேகமாக கனரக வாகனங்கள் செல்லும்போது குறைந்த வேகத்தில் செல்லும் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் விபத்தில் சிக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதை கருத்தில்கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறைவான வேகத்தில் செல்லும் வாகனங்கள் விரைவுச்சாலையின் இருபுறமும் உள்ள அணுகுசாலைகளை பயன்படுத்தலாம் என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கான ஊதிய நிலுவைத் தொகையை மத்திய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

நடப்பு நிதியாண்டில் தமிழகத்திற்கு ஆயிரத்து 22 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியத் தொகை வழங்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதைத் தவிர, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கடைசி வாரத்திலிருந்து திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் வழங்கப்படாததால், அதற்கான பொறுப்புத் தொகையும் ஆயிரத்து 678 கோடி ரூபாயாக சேர்ந்துள்ளதாக திரு. மு.க.ஸ்டாலின் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், அம்மாநில மேலவை உறுப்பினராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் மேலும் பத்து வேட்பாளர்களும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பிஜேபி-ஐ சேர்ந்த மூன்று பேரும், ஐக்கிய ஜனதாதளத்தின் இரண்டு பேரும், ராஷ்ட்ரிய ஜனதாதளம் சார்பில் 4 பேரும் மேலவைக்கு தேர்வானவர்களில் அடங்குவர்.

<<<<<<<>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் 13 மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை ஆம் ஆத்மி கட்சி வெளியிட்டுள்ளது.

அந்த கட்சியின் திரு குல்தீப் சிங் தாலிவால் - அம்ரிஸ்டர் தொகுதியிலும்,

திரு சுஷில்குமார் ரிங்கு - ஜலந்தர் தொகுதியிலும்,

திரு குர்மித் சிங் - பதின்டா தொகுதியிலும் போட்டியிட உள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்பெயினில் நடைபெற்ற பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் பிரிவில் Bhavina Patel தங்கப்பதக்கத்தையும், Sonalben Patel வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

---------

உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்புக் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-----------

சிங்கப்பூர் Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சரத் கமல் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் எகிப்தின் Omar Assar –ஐ வென்றார்.

----------

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 6-1, 6-2 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் Jang Yun Seok-ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் சித்தார்த் விஸ்வகர்மா, 4-6, 6-4, 7-5 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் Woovin Shin-ஐ வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

-----------

இந்தூரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் மும்பை அணி 169 ரன் வித்தியாசத்தில் விதர்பா அணியை வென்று கோப்பையை கைப்பற்றியது.

<<<<<<END>>>>>